BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# எதிர்காலத்தில் முன்னணி வகிக்கும் நகரம் எனவும் முதலீட்டுக்கான முதன்மையான அமைவிடம் எனவும் 2021 ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் எஃப்டிஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDI Intelligence) அமைப்பு ப்ராம்ப்ட்டன் நகரை நிலை நிறுத்துகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 18, 2021) – இன்றைய தினம், ஃபினான்ஷியல் டைம்ஸ் இங்கிலாந்து(Financial Times (UK)) வின் ஒரு பிரிவான எஃப்டிஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDI Intelligence) அமைப்பு, இந்த ஆண்டிற்கான அமெரிக்க சிறப்பு நகரங்கள் எனும் விருதுகளை அறிவித்தது; இதில் ப்ராம்ப்ட்டன் நகரம் எதிர்கால நடுத்தர அளவிலான முதல் 10 அமெரிக்க நகரங்கள் வரிசையில் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

எதிர்கால நடுத்தர அளவிலான முதல் 10 அமெரிக்க நகரங்கள் வரிசையில், இணைக்கும் தன்மை வகையில் முதல் 10 நகரங்களில் இரண்டாவது இடத்தையும், அன்னிய நேரடி முதலீட்டு ( FDI ) வியூக வகையில் முதல் 25 அமெரிக்க நகரங்களில் ப்ராம்ப்ட்டன் நகரம் பன்னிரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது.

ப்ராம்ப்ட்டனின் அந்நிய நேரடி முதலீட்டு (எஃப்.டி.ஐ) முயற்சிகள் நகரத்தின் முக்கிய துறைகளில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றன; அவையாவன: புதுமை படைத்தல் மற்றும் தொழில்நுட்பம், முன்னோடியான தயாரிப்புஉற்பத்தி, உணவு மற்றும் பானம் பதப்படுத்துதல் மற்றும் சுகாதாரம் மற்றும் வாழ்க்கை அறிவியல். 2020 ஆம் ஆண்டில், நகரத்தின் அன்னிய நேரடி முதலீட்டு யுக்தியின் ஒரு அங்கமாக வணிகத்தைத் தக்கவைத்தல் மற்றும் விரிவாக்கத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

2020 மே மாதத்தில் ப்ராம்ப்ட்டன் நகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட நகரத்தின் Eபொருளாதார மீட்புக்கான வியூகம் (Economic Recovery Strategy) முதலீடு ஒரு முக்கிய எல்லைக்கல்லாக இருக்கிறது. இந்த மூலோபாயத்தின் மற்றொரு முக்கிய பகுதியாக இருப்பது, நகரத்தின் புதுமை படைக்கும் மாவட்டத்தின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியாகும். பொருளாதார மீட்புக்கான உத்தியானது, ப்ராம்ப்ட்டன் பொருளாதாரத்திற்கு தாக்குப் பிடிக்கும் தன்மை மற்றும் போட்டியின் சாதகங்களைக் கொண்டுவருவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது; மேலும் நகரம் COVID-19 தொற்றுநோய்த் தாக்கத்தியிலிருந்து விடுபட்டு முன்னேறவும் உதவும்.

எஃப்.டி.ஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDi Intelligence) அமைப்பிலிருந்து ப்ராம்ப்ட்டன் அங்கீகாரம் பெறுவது இது முதல் முறை அல்ல. தரவரிசையானது ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது; கடந்த எட்டு ஆண்டுகளாக, வணிக நட்புறவு, எதிர்கால சிறப்பு நகரம், உள்கட்டமைப்பு மற்றும் இணைக்கும் தன்மை போன்ற பிரிவுகளில் ப்ராம்ப்ட்டன் தொடர்ந்து சீராக வென்றது அல்லது முதலிடத்தில் உள்ளது.

நகரங்களை தரவரிசைப்படுத்தும்போது எஃப்.டி.ஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDi Intelligence) அமைப்பு, ஐந்து வகைப்பிரிவுகளை கருத்தில் கொள்கிறது: பொருளாதார உட்பொதிவு, வணிக நட்புறவு, மனித மூலதனம் மற்றும் வாழ்க்கை பாவனை, செலவு செய்வதில் திறமையாக இருக்கும் தன்மை மற்றும் இணைக்கும் தன்மை.

முழு முடிவுகள் மற்றும் தரவரிசை பற்றிய மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கப்பெறும்

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் ஒரு போட்டி நிறைந்த திறமைகளைக் கொண்ட வாய்ப்புகளுக்கான நகரம், இது புதுமை படைத்தலுக்கு வழிவகுக்கிறது. எஃப்.டி.ஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDi Intelligence) அமைப்பினால் எதிர்காலத்தின் மத்திய அளவிலான சிறந்த 10 அமெரிக்க நகரங்களில் ஒன்றாக மீண்டும் ப்ராம்ப்ட்டன் அங்கீகரிக்கப்படுவதில் பெருமிதம் கொள்கிறோம். இந்த விருதுகள் நாம் ஏற்கனவே அறிந்ததை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றன - ப்ராம்ப்ட்டன் ஒரு உலகத் தரம் வாய்ந்த நகரம் என்பதுடன் உலகளாவிய வணிகங்கள் முதலீடு செய்வதற்கான பிரதான இடமும் ஆகும். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

”கோவிட்-19 தொற்று பரவலின் தாக்கங்களிலிருந்து நாம் மீண்டு வந்து நகரத்தை திறக்கவும் மற்றும் முன்னேறவும் தொடங்குகையில், ப்ராம்ப்ட்டன் பொருளாதாரத்திற்கு, தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் போட்டியின் சாதகங்களைக் கொண்டு வருவதில், முதலீடுகள்முக்கிய பங்கு வகிக்கும். அவர்களின் அமெரிக்க நகரங்களுக்கான வருடாந்திர விருதுகளுக்காக எஃப்.டி.ஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDi Intelligence) இனால் மீண்டும் அங்கீகரிக்கப்படுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்; மேலும் ப்ராம்ப்ட்டனை எதிர்கால முன்னணி நகரமாக மாற்றும் விஷயம் எது என்பது குறித்து மேலும் அறிய அனைத்து வெளிநாட்டு நிறுவனங்களையும் இங்கு வரவேற்கிறோம். ”

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

”முதலீடு என்பதே நகரத்தின் பொருளாதார மீட்புக்கான யுக்தியின் ஒரு முக்கிய எல்லைக்கல்லாகும்; மேலும் ப்ராம்ப்ட்டன் தன்னை ஒரு புதுமையான நகரமாகவும், உலகெங்கிலும் உள்ள வணிகத்திற்கான பிரதான முதலீட்டு இடமாகவும் நிலைநிறுத்த அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. ப்ராம்ப்ட்டன்

எதிர்காலத்தின் சிறந்த நடுத்தர அளவிலான நகரம் என்ற எஃப்.டி.ஐ (fDI)யின் அங்கீகாரத்தை நாங்கள் வரவேற்கிறோம். உலகத்தரம் வாய்ந்த நகரம் என்பதில், நாங்கள் வணிகத்தையே குறிக்கிறோம், மற்றும் எங்கள் சமூகத்தில் அந்நிய முதலீட்டை வரவேற்று காத்திருக்கிறோம். ”

*- பால் விசென்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத் தலைவர், பொருளாதார மேம்பாடு மற்றும் கலாச்சாரம், ப்ராம்ப்ட்டன் நகரம்*

ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளுக்கான நகரம், கனடாவின் புதுமைபடைக்கும் பகுதியில் பிரதான இருப்பிடத்தில் நாங்கள் இருப்பது மற்றும் எங்கள் போட்டிக்கு தயார் என்ற தொழிலாளர் படையைக் கொண்டு, வெளிநாட்டு வணிகங்கள் இங்கு வந்து இறங்குவதற்கான உகந்த இடமாக இதை நாங்கள் தொடர்ந்து நிலைநிறுத்துகிறோம். ப்ராம்ப்ட்டன் நகரத்தின் ஊழியர்கள் சார்பாக, எஃப்.டி.ஐ இன்ட்டெல்லிஜென்ஸ் (fDi Intelligence) அமைப்பினால் மீண்டும் முதலீட்டுக்கான இடமாக ப்ராம்ப்ட்டன் அங்கீகரிக்கப்படுவதில் எங்கள் பெருமிதத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்; அன்னிய நேரடி முதலீட்டாளர்கள் இங்கு வருவதையும் எங்கள் அர்ப்பணிப்புள்ள பொருளாதார மேம்பாட்டு ஊழியர்களை அணுகி ப்ராம்ப்ட்டனில் என்னவெல்லாம் கிடைக்கும் என்பது பற்றி தெரிந்துகொள்ள கலந்துரையாடுவதையும் நான் வரவேற்கிறேன். . ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca